**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: S.T.C. 8/2018**
**Deposition of witness for prosecution -DW-3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கோகுல்நாத் |
| Father Name | : | திரு.துரைச்சாமி |
| Village | : | பரமக்குடி |
| Taluk | : | பரமக்குடி |
| Calling | : | மண்டல துணை வட்டாட்சியர், இராமநாதபுரம் |
| Religion | : | இந்து |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 1st day of November 2022.

முதல் விசாரணை:

நான் தற்போது மண்டல துணை வட்டாட்சியராக இராமநாதபுரத்தில் பணி புரிந்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் முனீஸ்வரி என்பவருக்கு எங்கள் துறையில் இருந்து குடும்பஅட்டை வழங்கப்பட்டுள்ளது. அந்த குடும்ப அட்டையின் வகை அரிசி வழங்கக்கூடிய குடும்ப அட்டை ஆகும். அரிசி வழங்கும் குடும்ப அட்டை ஒருவரின் அதிகபட்ச வருட வருமானம் என்ன இருந்தால் அரிசி வழங்கும் குடும்ப அட்டை வழங்குவோம் என்றால் ஆண்டு வருமானம் ரூ.84,000/- இருந்தால் அரிசி வழங்கும் குடும்ப அட்டை வழங்குவோம். புகார்தாரருக்கு அரசாங்கத்தினரிடமிருந்து குடும்ப அட்டைதாரார்களுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படுகிறது. அந்த அட்டையில் குடும்ப உறுப்பினர்களாக 4 பேர் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குடும்ப அட்டை விண்ணப்பிக்கும்போது அந்த குடும்ப உறுப்பினர்களின் தொழில் என்ன என்று கூறி விண்ணப்பித்துள்ளார்கள் விவசாயிகள் என்று குறிப்பிட்டு விண்ணப்பித்துள்ளார்கள். இன்றைய தேதி வரை புகார்தாரருக்கு வழங்கிய குடும்ப அட்டை நிலுவையில் இருந்து வருகிறது. அந்த அட்டை அவர்களிடம் சுமார் 10 வருடங்களாக இருந்து வருகிறது.

(புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. )

(ஒப்பம்/- எம். சிட்டிபாபு)

நீதித்துறை நடுவர் எண்.1
இராமநாதபுரம்